வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=

## இனப்பிரச்னைக்குத் தீர்வு இல்லாமல் பொருளாதார முன்னேற்றம் நடக்காது!

சபையில் கூறினார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, நவ. 08
நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வருடாந்த சடங்கு மாத்திரமே என இலங்கைத்

07

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 08.11.2025 சனிக்கிழமை | இதழ் : 312 | பக்கங்கள் : 08

# பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படும் என்று அச்சம் வேண்டாம்!

### பட்ஜெட் உரையில் ஜனாதிபதி அநுர அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 08
''நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொருளாதாரம் ஸ்திரத்தன்மையில் இருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தேசிய வருமானம், அரச நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.''
-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

ஜனாதிபதியும் நிதி அமைச்சரும் அநுரகுமார திஸாநாயக்க 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார். அவரது உரையின்

07



## மக்களுக்கு சலுகைகள் இல்லாத பட்ஜெட் இது!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 வரவு-செலவுத் திட்டமானது, மக்களுக்கு சலுகைகள் இல்லாத சர்வதேச நாணய நிதியத்தின் வெறும் வரவு செலவுத் திட்டமாகும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.
பாராளுமன்ற வளாகத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சஜித், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-
இன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் சமூக யதார்த்தத்தை புரிந்து கொண்டு முன்வைக்கப்பட்ட தொரு வரவுசெலவுத் திட்டமாக அமைய வில்லை. நாட்டு மக்கள் இன்று பல துயர்கரமான சூழ்நிலைமைகளை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வறுமை அதிகரித்து காணப்படுகின்றன. வேலையின்மையும் அதிகரித்துள்ளது.

07

## மாகாண சபைத் தேர்தலுக்காக ரூபா 10 பில்லியன் நிதி ஒதுக்கீடு!

### ஆயினும் எல்லை நிர்ணயத்தின் பின்பே தேர்தல் பட்ஜெட் உரையில் நேற்று கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 08
மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று தனது

07

## அரசாங்க ஊழியர்களுக்கு 2 ஆம் கட்ட சம்பள உயர்வு

### 110 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 08
அரச ஊழியர்களுக்கான இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்புக்காக 110 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இந்த இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பு எதிர்வரும் ஜனவரி முதல் வழங்கப்படும் என அவர்

07

## ஊழல்வாதிகள் தப்பமுடியாது!

### பட்ஜெட் உரையில் ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, நவ. 08
அமெரிக்காவும், ரஷ்யாவும் இணைந்து ஹிட்லரை தோற்கடித்ததுபோல எதிரணிகள் ஒன்றிணைந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சர்வாதிகார பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென எதிரணிகள் விடுத்த அறைகூவலுக்கு பாதீட்டு உரையில் பதிலடி கொடுத்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.
மக்களுக்கு அநீதி

07

## பதில் பிரதம நீதியரசராக துரைராஜா



கொழும்பு, நவ. 08
உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா நேற்று ஜனாதிபதி

07

## மாகாண நிர்வாகத்தை ஆளுநர் நடத்துவது ஜனநாயக விரோதம்!

### மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 08
மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் அதன் நிர்வாகத்தை ஆளுநர் ஊடாக முன்னெடுத்து வருவது ஜனநாயக விரோதச் செயலாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து



வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு

07

## அரச சேவைக்கு 75ஆயிரம் பேர்!

கொழும்பு, நவ. 08
இனிவரும் காலங்களில் அரச துறையில் சகல ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் அரச தலையீடின்றி உரிய பரீட்சை மற்றும் சேவைப் பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அரச சேவைக்கு 75 ஆயிரம் பேரை இணைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.
இதன்மூலம் இளைஞர், யுவதிகளுக்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.
2026ஆம் ஆண்டுக்கான

07

## வவுனியா விபத்தில் யாழ். இளைஞர் பலி!

வவுனியா, நவ. 08
கனகராயன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் பெரிய குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பதிவாகியுள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற லொறி எதிர் திசையில் வந்த முச்சக்கர

07

## 21 வருடங்களின் பின் 3 குழந்தைகளை பிரசவித்த தாயார் யாழில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 08
யாழ்ப்பாணத்தில் 21 வருடமாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்த குடும்பப் பெண், 3 குழந்தைகளை பிரசவித்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.
கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யோகராசா மயூரதி (வயது 45) என்ற தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த பெண் 21 வருடங்களாக குழந்தைப் பாக்கியம்

07

## பற்றாக்குறை ரூ.1,757 பில்லியன்!

கொழும்பு, நவ. 08
2026 வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் மொத்த வருவாய் ரூ. 5,300 பில்லியனாகவும், மொத்தச் செலவு ரூ. 7,057 பில்லியனாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை 1,757 பில்லியனாக உள்ளது.
2026 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.
2026 வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில்

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபட்ட சட்டவைத்திய அதிகாரி நீக்கம் குறித்து ஆராய்வு!

**சிறீ பவானந்தராஜா எம்.பி. கூறுகிறார்**

யாழ்ப்பாணம், நவ. 08

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் இரு சட்ட வைத்திய அதிகாரிகள் கடமையில் இருந்த நிலையில் ஒருவர் நீக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிறீ பவானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அரசாங்கம் தங்கு தடை இன்றி நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகிறது. இந் நிலையில் குறித்த புதைகுழி அகழ்வுப் பணியில் இரு சட்ட வைத்திய அதிகாரிகள் கடமை யாற்றிய நிலையில் ஒருவரை அதிலிருந்து நீக்கி உள்ளனர்.

பாராளுமன்ற சுகாதார மேம்பாட்டு உயர்மட்டக் குழுவில் நான் பங்குபற்றிய நிலையில் செம்மணி அகழ்வில் மாதிரிகளை சேகரிப்பது ஆராய்வது தொடர்பில் மேலும் ஒரு சட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தேன்.

அதன் அடிப்படையில் யாழ். போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லை யாவுக்கு மேலதிகமாக யாழ். தீவகத்தில் கடமையாற்றும் சட்ட வைத்திய அதிகாரி அகழ்வுப் பணிகளில் கடமை யாற்றினார்.

குறித்த வைத்தியர் மூன்று மாதங்கள் மட்டுமே கடமை யாற்றியதாக அறியக் கிடைக்கும் நிலையில் குறித்த சட்ட வைத்திய அதிகாரி நீக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி மீண்டும் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

# மன்னார் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் குறைபாடுகள்!

மன்னார், நவ. 08

மன்னார் பொது வைத்திய சாலை சிற்றுண்டிச்சாலையின் அவல நிலை குறித்து மன்னார் நகர சபையில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக, மன்னார் நகர சபையின் சுகாதாரக் குழு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மன்னார் பொது வைத்திய சாலை சூழல் மற்றும் பொது வைத்தியசாலையின் கீழ் குத்தகை அடிப்படையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் தொடர்ச்சியாக பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் நிலவுவதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மன்னார் நகரசபை சுகாதார குழு உறுப்பினர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் தலைமையில் வைத்தியசாலைக்குச் சென்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின்போது பல் வேறு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறிப்பாக மனித கழிவுகள் சிற்றுண்டிச்சாலை வளாகத்தில் காணப்பட்டமை, கழிவுநீர், மலக்கழிவுகள் திறந்த பகுதியில் விடப்பட்டமை, அதிகளவான இலையான்கள், துர்நாற்றம், ஒழுங்கற்ற கழிவகற்றல், நுளம்பு பெருக்கத்திற்கு சாதகமான சூழல், கழிவு நீர் வாய்க்கால்களில் புழுக்கள், உணவுப் பொருட்கள் ஒழுங்கான முறையில் களஞ்சியப்படுத்தப்படாமை, அழுக்கான சமையலறை, கழிப்பறை தொட்டிகள் மூடப்படாமை உள்ளடங்களாக பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்டன.

இவ்வாறான நிலையில் குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதுடன் வைத்திய சாலை நிர்வாகத்துக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (அ)

# வடக்கு மாகாணத்துக்கு ஒரே தடவையில் அதிக ஆயுள்வேத மருத்துவ அலுவலர்கள்

## ஜனாதிபதிக்கு நன்றி கூறினார் ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ. 08

பொருளாதார நெருக்கடி முகம்கொடுத்து மீண்டெழுந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வடக்கு மாகாணத்துக்கு ஒரே தடவையில் அதிகூடிய ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களை வழங்கியமைக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோருக்கு வடக்கு மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் மாகாண சுதேச வைத்தியத் துறைத் திணைக்களத்துக்கு 42 ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 36 பேர் சுதேச வைத்தியத்துறையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கும் 6 பேர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் கீழும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமன நிலையங்களை வழங்கும் நிகழ்வு பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர், வேலை இல்லை என்று சொல்லி தங்களுக்கு அரசாங்க வேலை கோருவார்கள். வேலை கிடைத்த பின்னர் வீட்டுக்குப் பக்கத்தில் திணைக்களத்தைக் கேட்பார்கள். நீங்கள் அப்படிச் செய்யக்கூடாது. இதுவரை காலமும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் இல்லாமையால் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மிகப் பெரும் சவால்களை நாம் சந்தித்திருந்தோம். இந்த நியமனங்கள் ஊடாக அது சரிசெய்யப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவம் என்பது ஒரு சாதாரண சிகிச்சை முறை மட்டும் அல்ல. அது நமது தொன்மையான பண்பாட்டு மரபின் உயிரோட்டம். நமது மண்ணின் செடிகள், மூலிகைகள், இயற்கை வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் தலைமுறைகளின் அனுபவ ஞானத்தின் அழகிய சங்கமமே இந்த சிகிச்சை முறை. இந்த மரபு தொலைந்து போகாமல் பாதுகாக்கப்படவேண்டும் புதிய தலைமுறைக்கு உரிய முறையில் பரிமாறப்பட வேண்டும். அதில் நீங்கள் வகிக்க உள்ள பங்கு மிகப் பொறுப்பானதும் பெருமைமிக்கதுமானதாகும்.

எமது நோக்கம் தெளிவானது மக்கள் வாழும் எல்லா இடங்களுக்கும் சுகாதார சேவை சென்றடைய வேண்டும். நகர மையங்களில் மட்டுமல்ல தொலைதூர கிராமங்களின் கடைசிக் குடியிருப்புகளுக்கும் அது கிடைக்க வேண்டும். இந்தப் பயணத்தில், ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களாகிய நீங்கள் மக்களுக்குச் செல்லக்கூடிய மிக அருகாமையான நம்பிக்கையான மருத்துவ சேவை ஆளுமைகளாக இருப்பீர்கள்.

உங்கள் சேவை ஒரு மருந்தளிப்பு அல்ல-அது ஒரு ஆறுதல், ஒரு நம்பிக்கை, ஒரு மனிதநேயம். இன்று நீங்கள் பெறும் நியமனம் ஒரு வேலை வாய்ப்பு அல்ல. இது ஒரு மக்கள் சேவைக்கான உறுதி. மக்கள் உங்களை நம்பி வரும் போது, அந்த நம்பிக்கையை நீங்கள் காக்கவேண்டும்.

இதுவரை பல துறைகளில் மக்கள் சேவை பெரும்பாலும் அலட்சியப்படுத் தப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் நன்கு அறிவோம். நீங்கள் அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக இல்லாமல், அத்தருணத்தை மாற்றும் தலைமுறையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நோயாளியையும் சந்திக்கும் போது, "இந்த நிலை நான், அல்லது எனது குடும்பம் என்றால் நான் எப்படி அணுகுவேன்?" என்று நீங்கள் உங்களிடம் கேளுங்கள். அந்த ஒரு கேள்வியே உங்களை சிறந்த சேவை வழங்கும் வழியில் நடத்தி செல்லும்.

வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தை, மக்கள் சேவைக்கு மிக நெருக்கமான, அணுகத்தக்க மற்றும் செயல்திறனான இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாகாண நிர்வாக அலுவலகங்களை யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு மட்டுமே வைத்திருக்காமல், மாகாணம் முழுவதுக்கும் அணுகுமுறையை சமமாக்கும் வகையில் பல திணைக்களங்கள் நிலப்பரப்பாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. கிளிநொச்சியில் காணித் திணைக்கள அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதும், மாங்குளத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் செயல்பட்டு வருகின்றதும் அதன் எடுத்துக்காட்டுகளாகும்- என்றார்.


இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி தில்லையம்பலம் சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி, நவ. 08

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும், ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநரும் இணைத் தலைவருமான நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரனின் வரவேற்புரையுடன் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் ஆரம்ப உரை இடம்பெற்றது. அதன் பின்னர் இணைத்தலைவர் உரையாற்றிய ஆளுநர், ஆண்டு நிறைவடைவதற்கு இன்னமும் ஆறு வாரங்கள் மாத்திரமே உள்ள நிலையில் ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனாக செலவு செய்து நிறைவு செய்வதற்கு அனைத்து திணைக்களங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதேபோன்று 2026ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் அனைத்தும் ஜனவரி மாதமே மாகாணசபையால் ஆரம்பிக்கக் கூடிய நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர், இந்த ஆண்டைப்போன்று அடுத்த ஆண்டும் அனைத்துத் திணைக்களங்களும்



ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதன் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் ஆராயப்பட்டன. தொடர்ந்து, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன. மேலும், கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. வேறு பல விடயங்களும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சி.சிறீதரன், ஜெ.றஜீவன் ஆகியோரும், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
08.11.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது அவர்களின் பிரச்னையில்லை

இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இந்தியாவிற்கு அக்கறையில்லையா - இது பாரதத்தின் இயலாமையா என்று வடக்கு மாகாண சபையின் முன்னைநாள் முதலமைச்சர் சி.விக்கினேஸ்வரன் கேள்வி எழுப்பியிருக்கின்றார். இந்தியா அதன் நிலைப்பாட்டை தொடர்ந்தும் வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றது - அதற்கப்பால் சிங்கள ஆட்சியாளர்களின் குரல்வளையை, இந்தியா நெரிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால் அது இந்தியாவின் பிரச்னையில்லை - மாறாக அவ்வாறு எதிர்பார்ப்பவர்களின் அரசியல் அறியாமை.

சி.வி.விக்கினேஸ்வரன் வடக்கு முதலமைச்சராக இருக்கின்ற போது அரசியலமைப்பின், பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை ஒரு சட்டப் போராட்டாக மாற்றியிருக்கலாம் ஆனால் விக்கினேஸ்வரனோ கட்சிக்குள்ளும் மோதிக்கொண்டு, வடக்கு மாகாண சபைக்குள்ளும் அணிகளாக பிரிந்து இனப்படுகொலை தீர்மானம் தொடர்பில் பேசிக் கொண்டிருந்தார். மாகாண சபையை உச்சபட்சமாக பயன்படுத்த வேண்டும் என்னும் ஆகக் குறைந்த புரிதல் கூட விக்கினேஸ்வரனிடம் இருந்திருக்கவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தபோது, அவரது நிகழ்ச்சி நிரலையும் மீறி சி.வி.விக்கினேஸ்வரனை தனியாக சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் உதவியை கோரியிருக்கலாம். அவ்வாறு கோரியிருந்தால் நிச்சயம் பிரமதர் மோடி அதனை மறுத்திருக்கப் போவதில்லை. ஏனெனில் மாகாண சபையை பலப்படுத்தும் விடயத்திற்கு இந்தியா நிச்சயம் உதவும். ஆனால் விக்கினேஸ்வரனோ பாலியல் குற்றச்சாட்டு வழக்கில், குற்றவாளியாக இனங்காணப்பட்டு, சிறைத் தண்டனையில் இருந்த பிரேமானந்தா என்பரை விடுதலை செய்யுமாறு கோரி, பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

சி.வி.விக்கினேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சரானபோது, பலரும் அதனை சாதமாகவே நோக்கியிருந்தனர். ஆரம்பத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் பெரும்பான்மையினரும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் விக்கினேஸ்வரனின் தெரிவை ஆதரித்திருக்கவில்லை - அவர் பொருத்தமற்றவர் என்றே நோக்கினர் ஆனால் பின்னர் சம்பந்தனை பகைத்துக் கொள்ள முடியாமல் ஆதரித்தனர்.

ஆனால் விக்கினேஸ்வரனோ தனக்கு கிடைத்த வாய்ப்பை உச்சளவில் பயன்படுத்தவில்லை. மாறாக, தமிழர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தால் அதனை போட்டுடைப்பார்கள் என்று மற்றவர்கள் பரிகசிக்கும் வகையிலேயே நடந்து கொண்டார். விக்கினேஸ்வரனின் தவறுகளால், வடக்கு மாகாண சபையின் காலம் என்பது கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போல், மக்களுக்கு எவ்வித பயனுமற்ற வகையில் வீணாகிப் போனது.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் இவ்வாறு நாசமாக்கும் அரசியல் வாதிகளை எவ்வாறு மற்றவர்கள் நம்புவார்கள்? ஈழத் தமிழர் விடயத்தில் ஏற்கனவே விரல்களை சுட்டுக்கொண்ட அனுபவத்தை பெற்றிருக்கும் இந்தியா எவ்வாறு இப்போதிருக்கும் தமிழ் அரசியல்வாதிகளை நம்பி செயலாற்ற முடியும்? இந்தியா தொடர்பிலும், இராஜதந்திர சமூகம் தொடர்பிலும் பேசுவதற்கு முன்னர், தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் - முதலில், தங்களை அறிவதும், அதனடிப்படையில் தங்களை திருத்திக் கொள்வது பற்றியும்தான் சிந்திக்கவேண்டும்.

## வட மாகாண மர நடுகை மாதம்
## கார்த்திகை - 2025

“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ,
அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்.”
- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)



# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 19 வீதத்தால் குறைவு!

கொழும்பு, நவ. 08

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் கடந்த ஆண்டை விடவும் இவ்வருடம் 19 வீதமளவில் குறைந்துள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் அடிக்கடி கொள்வனவு செய்யும் 40 வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வீட்டுத் தேவைகளுக்கு பயன்படும் பொருட்களே அதிகம் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

நுகர்வோர் அடிக்கடி கொள்வனவு செய்யும் பொருட்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. இத்தகைய பொருட்களின் விலைகளைக் குறைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே, 55 முதல் 60 வகையான பொருட்களின் விலைகளை குறைத்துள்ளோம். பொருட்களின் விலை குறைப்பை மேற்கொள்வதில் அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.

மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்கும் நோக்குடனே அரசாங்கம் இவ்விலைகளைக் குறைத்துள்ளது -என்றார். (அ)

### கணவன், மகன் ஹெரோயினுடன் கைது:
# திசைகாட்டி உறுப்பினர் பதவி விலகல்!

கொழும்பு, நவ. 08

அநுராதபுரம், எப்பாவல பகுதியில் சுமார் 2 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய பாடசாலை அதிபர் மற்றும் அவருடைய மகன் ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில், பாடசாலை அதிபரின் மனைவியான தேசிய மக்கள் சக்தியின் நகர சபை உறுப்பினர் டிஸ்னா நிரஞ்சலா குமாரி பதவி விலகியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவர் மீது தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பேலியகொடை நகர சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் நகர சபை உறுப்பினராக நிரஞ்சலா குமாரி தேர்தெடுக்கப்பட்டார்.

நாட்டில் போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முழு கவனம் செலுத்தி வரும் நிலையில், இந்த சம்பவம் தனிப்பட்ட ரீதியில் அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், சட்ட நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கும், நாட்டில் ஒரு நல்ல அரசியல் கலாசாரத்தை உருவாக்க தேசிய மக்கள் சக்தியால் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கும் அவர் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கம்பஹா மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு அனுப்ப ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதன் நகல் தேசிய மக்கள் சக்தி யின் பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கைதான அதிபர் பணி நீக்கம்!

கொழும்பு, நவ. 08

ஹெரோயின் போதைப் பொருள் கையிருப்புடன் கைது செய்யப்பட்ட அதிபரை பணி நீக்கம் செய்வதற்கு வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் தீர்மானித்துள்ளார்.


குறித்த அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர், அநுராதபுரம் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நகர சபை உறுப்பினர் ஒருவரின் கணவரான குறித்த அதிபர், அண்மையில் 1 கிலோ 118 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் 12ஆம் திகதிவரை அவரை தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**மிதுனம்**
யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார். வாகன வசதிப் பெருகும்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும்.

**விருச்சிகம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வாகனத்தை சரி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பொது விஷயங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**மகரம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கும்பம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்கள் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

# இம்முறை எந்தவித கெடுபிடிகளுமின்றி நினைவேந்தலை முன்னெடுக்க முடியும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 08

மாவீரர் துயிலுமில்லங்களில் நிலை கொண்டுள்ள படையினர் விரைவில் வெளியேற்றப்படுவார்கள். மாவீரர்களின் குடும்பங்கள் எந்தவித கெடுபிடிகளுமின்றி இம்முறை நினைவேந்தல்களை முன்னெடுக்க முடியுமென கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கெடுத்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், தேராவில் துயிலுமில்லத்தில் சுமார் 15 வரையிலான படையினரே நிலைகொண்டுள்ளனர். தற்போதைய ஆட்சியாளர்களாவது படையினரை அங்கிருந்து வெளியேற்றி துயிலுமில்லத்தை விடுவிக்க கோரியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர், மாவீரர்களது குடும்பங்கள் எந்தவித கெடுபிடிகளுமின்றி இம்முறை நினைவேந்தல்களை முன்னெடுக்க முடியுமெனவும் படைகளை துயிலுமில்லங்களிலிருந்து வெளியேற கோரும் பணிப்பு ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தரவு படைகளை சென்றடையவில்லையெனவும் விரைவில் மாவீரர் துயிலுமில்லங்களில் நிலை கொண்டுள்ள படைகள் வெளியேறப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் துயிலுமில்லத்திலுள்ள படையினரையும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார். (எ)

# சட்டவிரோதமாக நிதி சேகரிக்க வந்த கும்பல் பொலிஸாரால் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 08

நிதி சேகரிப்புக்காக யாழ்ப்பாணம் வந்த கும்பல் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் விரட்டியடிக்கப்பட்டது.

குறித்த குழுவில் உள்ளவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு உடலில் பாதிப்புகள் உள்ளதாகவும் அவற்றுக்கு சிகிச்சை செய்வதற்கு பாரியளவு நிதி தேவை என்றும் பொய்கூறி வெவ்வேறு மாவட்டங்களில் தொடர்ச்சியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் குறித்த கும்பல் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்தது.

இது குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த குழுவில் இருந்த மூவரையும் அழைத்துச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நிதி சேகரிப்பில் ஈடுபடக்கூடாது என கடுமையாக எச்சரித்த பின்னர் பொலிஸார் அவர்களை விடுவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# “சுதேச மருத்துவ திணைக்கள அலுவலகம் மாங்குளத்தில் அமைக்கப்பட வேண்டும்”

மன்னார், நவ. 08

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகத்தை வடமாகாணத்தின் மையப்பகுதியான மாங்குளத்தில் அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி வேறு இடங் களில் குறித்த அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத் தால் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படுமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துக்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி எழுப்பிய நிலையில், வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் தி. சர்வானந்தன் யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப. ஜெயராணி, கிளிநொச்சியிலும் குறித்த வடமாகாண சுதேச மருத்துவத்திணைக்கள அலுவலகத்தை அமைக்கலாமென தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே ரவிகரன் எம். பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மாங்குளம் வடமாகாணத்தின் மையப்புள்ளியில் அமைந்துள்ளதால், மாங்குளத்தில் வடமாகாணத்துக்குரிய மாகாணத் திணைக்களங்கள் அமைக்கப்படவேண்டுமென மாகாண சபையில் ஏற்கனவே அனைவராலும் தீர்மானிக்கப்பட்டிருந்து.

எனவே, இந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வட மாகாணத்துக்குரிய சில மாகாணத் திணைக்களங்கள் மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையிலே வடமா காண சுதேச மருத்துவத்தி ணைக்கள அலுவலகமும் மாங்குளத்தில் அமைக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய கடந்த 2020.12.23ஆம் திகதி இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட காணிப்பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் குறித்த வடமா காண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு 02 ஏக்கர் காணி ஒதுக்குவ தெனத் தீர்மானிக்கப்பட்டு காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்போதும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருவதாக அறியமுடிகின்றது.

குறித்த வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள அலுவலகத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு காணி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை அங்கு அலுவலகம் அமைக்கப் படாமைக்கான காரணம் என்ன? தொடர்ந்தும் எதற்காக யாழ்ப்பாணத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்றீர்கள்? மாங்குளத்தில் குறித்த அலுவலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளரை இதற்குரிய பதிலை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றார்.

# 30 இந்திய மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறை

மன்னார், நவ. 08

இலங்கை எல்லைக்குள் அத்துமீறி தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 30 இந்திய மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

கடந்த மாதம் குறித்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் குறித்த மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்களின் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் இடம் பெற்ற நிலையில் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டனர். இதன்போது முதலாம் மற்றும் இரண்டாம் குற்றச்சாட்டுக்களுக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மூன்றாவது குற்றச்சாட்டுக்கு 26 மீனவர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ஏற்கனவே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நிபந்தனை யுடன் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களுக்கு மூன்றாவது குற்றச்சாட்டுக்காக தலா 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொலொன்ன பிரதேச சபையில் -

# தேசிய மக்கள் சக்தியின் முதல் பட்ஜெட் தோல்வி!

கொழும்பு, நவ. 08

**தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் உள்ள இரத்தினபுரி - கொலொன்ன பிரதேச சபையின் முதலாவது வரவு - செலவு திட்டம் தோல்வியடைந்துள்ளது.**

கொலொன்ன பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு அதன் தலைவர் சம்பத் குணசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கொலொன்ன பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும் எதிர்க்கட்சிகள் 10 ஆசனங்களையும் வென்றதன் மூலம் எதிர்க்கட்சிக்கு அதிகாரம் கிடைத்த போதிலும் தலைவர் தெரிவுக்காக இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று கொலொன்ன பிரதேச சபையில் ஆட்சியை அமைத்தது. எவ்வாறாயினும், முதலாவது வரவு - செலவு திட்டத்துக்கான வாக்கெடுப்பில், எதிர்க்கட்சி குழுக்கள் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

கொலொன்ன பிரதேச சபை, தேசிய மக்கள் சக்தியின் 9 உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் 5 உறுப்பினர்கள், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர் மற்றும் சர்வஜன பலய கட்சியின் ஒரு உறுப்பினரையும் கொண்டுள்ளது. (ஐ)

# நுகேகொடை பேரணியால் அச்சமடைந்துள்ளது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 08

நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்புப் பேரணியால் அரசாங்கம் சற்று அச்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில்-பல எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராகியுள்ளன.

எவ்வாறிருப்பினும் அந்த எதிர்ப்பு பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியாக நாம் கொள்கை ரீதியில் தீர்மானித்திருக்கிறோம். அந்தப் பேரணியில் பங்கேற்றாவிட்டாலும், அதற்கான ஆதரவை வழங்குவோம். அர சாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் மாத்திரமின்றி, நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டும். எந்த வொரு சந்தர்ப் பத்திலும் கட்சி தலைமைத்துவத்தின் தீர்மானங் களை ஏற்று அதற்க மையவே செயல்படுவோம் என்ற உறுதி மொழிக்க மையவே நாம் செயல்படுவோம். நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு பேரணியால் அர சாங்கம் சற்று அச்சமடைந்துள் ளதாகத் தெரிகிறது.

அரசாங்கம் கூறிய அனைத்து பொய்களும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. மக்களும் அவற்றை உணர ஆரம்பித்துள்ளனர். ஓராண்டு என்ற குறுகிய காலத்துக்குள் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆணையை அரசாங்கம் இழந்துள்ளது. அந்த வகையில் இந்த அரசாங்கத்தின் இயலா மையை மக்களுக்கு கொண்டு செல்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பொருத்தமான நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (அ)

# 50 இலட்சம் ரூபாய் மோசடி; கம்பஹாவில் பெண் கைது

கொழும்பு, நவ. 08

தென்கொரியா, இத்தாலி, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த பெண் ஒருவரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணை பிரிவினர் கைது வைத்து செய்துள்ளனர்.

சந்தேகநபரான இந்தப் பெண் இவ்வாறு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி நாட்டின் பல பகுதிகளிலும் ஏமாற்றி சுமார் 50 இலட்சம் ரூபாயைப் பெற்றுள்ளார். எனினும், அவர் உறுதியளித்தபடி வேலைவாய்ப்பை வழங்கவில்லை என்று விசேட விசாரணை பிரிவுக்கு 8 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நிலையில், கம்பஹாவிலுள்ள பெண்ணின் வீட்டுக்கு அவரை கைது செய்ய அதிகாரிகள் சென்றபோதிலும் அவரை கைது செய்யமுடியவில்லை.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவர் இஸ்ரேல் நாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி நேர்காணல் செய்கிறார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் பணியகத்தின் அவரை கைது செய்தனர். (ஐ)

# போதைப்பொருள் கடத்தியவர் கைது

கொழும்பு, நவ. 08

துபாயில் இருந்தவாறு நாட்டில் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை செயல்படுத்திய சங்கீதா என்ற பெண் போதைப்பொருள் கடத்தல்காரரின் உதவியாளர் ஒருவர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித் தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# விசேட தேவையுடையோருக்காக இறக்குமதியாகும் 10 பேருந்துகள்

## இலங்கை போக்குவரத்து சபை

கொழும்பு, நவ. 08

விசேட தேவையுடையோருக்காக 10 பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அடுத்த மாதமளவில் இந்தப் பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக 42 கோடி ரூபாய் செலவாகின்றது. விசேட தேவையுடையவர்களுக்கு அவசியமான வசதிகள் இந்தப் பேருந்துகளில் சேர்க்கப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

முதியோர்களுக்கான தேசிய செயலகம், இரத்மலானை விழிப்புலனற்றோர் பாடசாலை, கொழும்பிலுள்ள பிரதான மருத்துவமனைகள் மற்றும் கொழும்பு பிரதான பஸ் நிலையங்களை கேந்திரமாகக் கொண்டு இந்த 10 பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (அ)

# 2035இல் தொழு நோயற்ற நாடாக இலங்கை மாறும்

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை



தேசிய தொழுநோய் மாநாட்டை நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார தொடக்கி வைத்தபோது...!

கொழும்பு, நவ. 08

2035ஆம் ஆண்டுக்குள் நாட்டில் பதிவாகும் தொழுநோயாளர் எண்ணிக்கையை பூச்சியமாகக் குறைக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுத்து வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய தொழுநோய் மாநாட்டுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை 1996 ஆம் ஆண்டு தொழுநோயை ஒழித்தது. ஆனால், இந்தப் பயணம் இன்னும் முடிவடையவில்லை. நோயாளர்கள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் சுமார் 1500-2000 புதிய தொழுநோய் நோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர். இதில் சுமார் 10 வீதத்தினர் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்.

நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான முறையான மறுவாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான பயணத்தில் இந்த மாநாடு ஒரு முக்கியமான நிகழ்வாக அமையும். தொழுநோய் பரவலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகளை இது மேலும் வலுப்படுத்தும் - என்றார். (ஐ)

# கணவரை கத்தியால் குத்திய மனைவி கைது

கொழும்பு, நவ. 08

தனது கணவரை கத்தியால் குத்தி காயப்படுத்திய மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை - மகியங்கனை - சொரபொர வெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு, கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தகராறு முற்றியதிலேயே இந்தக் கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், சிவில் பாதுகாப்பு தலைமையகத்தில் பணியாற்றும் 43 வயதான நபரே காயமடைந்தார்.

காயமடைந்தவர் மகியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், 42 வயதான அவ ரின் மனைவியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# வெங்காயத்தின் விலையை 200 ரூபாயாக நிர்ணயிக்கவும்

## விவசாயிகள் கோரிக்கை

கொழும்பு, நவ. 08

இந்தியாவில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் வெங்காயத்தை விற்க முடியாமல் போயுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ வெங்காயத்துக்கான விலையை அரசாங்கம் 200 ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# விசேட பொலிஸ் சோதனையில் 980 பேர் கைது!

கொழும்பு, நவ. 08

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சோதனைகளில் மொத்தம் 980 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி,

நாடு முழுவதும் கடந்த புதன்கிழமை நடத்தப் பட்ட மொத்தம் 1,053 சோத னைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் 19 பேருக்கு எதிராக மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக, நடவடிக்கையின் போது அடையாளம் காணப்பட்ட நான்கு போதைப் பழக்கத்துக்கு அடிமையான வர்கள் மறுவாழ்வுக்காக பரிந்துரைக் கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தமிழர்களின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கவில்லை

## வரவு - செலவு திட்டத்தின்போது கடுமையான தீர்மானம் எடுப்போம் - சாணக்கியன் எம். பி.

கொழும்பு, நவ. 08

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னைகள் பற்றி ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரி ஐந்து மாதங்கள் காத்திருக்கிறோம். இதுவரையில் பதிலேதும் கிடைக்கவில்லை. வரவு - செலவுத் திட்டத்தின்போது கடுமையான தீர்மானம் எடுப்போம். தமிழர்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு அரசாங்கம் நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஊடாக பாரியதொரு மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசாங்கம் அரச சேவையாளர்களின் சம்பளத்தை ஆறு மாதத்துக்கு ஒருமுறை அதிகரிப்பதாகவும், வரி குறைப்பதாகவும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மின் கட்டணத்தை குறைப்பதாகவும் குறிப்பிட்டது. ஆட்சிக்கு வந்தவுடன் ஏதும் நடக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயல் திட்டத்துக்கு அமைவாகவே அரசாங்கம் செயல்படுகிறது. தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாயின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயல் திட்டத்தில் இருந்து விலக வேண்டும்.- என்றார். (எ)

# கண்டி அருப்போலாவில் அமெரிக்க பெண் மரணம்

கண்டி, நவ. 08

இலங்கைக்கு சுற்றுலா வந்த அமெரிக்கப் பெண் ஒருவர் கண்டி அருப்போலாவில் உள்ள தர்மசோக மாவத்தையில் உள்ள ஒரு வீட்டில் இறந்து கிடந்தார்.

கெய்ட்லின் ஜூலி கிளார்க் (வயது-55) என அடையாளம் காணப்பட்டவர்.

இவர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து செய்து மூன்று மாதங்களாக வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் தங்கியிருந்தார்.

முந்தைய நாள் அவர் சிகிரியாவுக்கு சுற்றுலா சென்று திரும்பி வந்தார்.

அவர் கடுமையான போதைப் பழக்கத்துக்கு அடிமையானவராக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்று வியாழக்கிழமை பிரேத பரிசோதனைக்காக கண்டி தேசிய மருத்துவமனைக்கு சடலம் அனுப்பப்பட்டது.

கண்டி சுற்றுலா பொலிஸ் துறையின் பொறுப்பதிகாரி சி.ஐ. லலித் மகாக்தர மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார். (எ)

# பேருந்து மீது மரம் முறிந்து விழுந்தது ஒருவர் உயிரிழப்பு, 10 பேர் காயம்

கண்டி, நவ. 08


தெல்தோட்டை - கண்டி பிரதான வீதியின் ஹால்வத்தைப் பகுதியில் பேருந்தின் மீது மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான குறித்த பேருந்து பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென அருகிலிருந்த பெரிய மரம் முறிந்து அதன் மீது விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பேருந்தில் பயணித்த மேலும் 10 பேர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கண் பரிசோதனை கூடம் தீப்பற்றி எரிந்து நாசம்




திருகோணமலை, நவ. 08

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பொது மருத்துவமனையின் அருகாமையில் உள்ள தனியார் கண் பரிசோதனை கூடம் தீப்பற்றி எரிந்தது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மின் ஒழுக்கு காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த கண் பரிசோதனை கூடத்தின் மேல் மாடி பகுதியில் தங்கியிருந்த தாதியர்களின் விடுதி அறையும் தீப்பற்றி நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உளநோய்களுக்கு கலையே மருந்து

### மேலதிக அரசாங்க அதிபர்

காரைதீவு, நவ. 08

நாட்டில் அதிகரித்து வரும் உளநோய்களுக்கு ஒரே மருந்து கலைதான். ஒன்றில் கலைஞனாக இருக்க வேண்டும், இன்றேல் இரசிகனாக இருக்க வேண்டும். இரண்டுமில்லாதவன் மனிதனே இல்லை என்றுஅம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய

"பௌர்ணமி கலைவிழா" முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணான காரைதீவில் கடந்த புதன்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-08)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் விபத்தில் காயம்!

ஹற்றன், நவ. 08

ஹற்றன் - மஸ்கெலியா பிரதான வீதியில், வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்து டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிக மழை காரணமாக வீதி வழுக்கல் தன்மையுடன் இருந்ததால், ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து, மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், ஓட்டோவில் பயணித்த கணவன், மனைவி காயமடைந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்

ஓட்டோ பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மாணவத்தூதுவர் தேசிய திட்டம்


திருகோணமலை, நவ. 08


தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சுடன் இணைந்து செயல்படுத்தும் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப் புத் தொடர்பான மாணவத் தூதுவர் தேசிய

நிகழ்ச்சித்திட்டமானது நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான தேசிய கொள்கை குறித்து மாணவத் தலைவர்களுக்கு அறிவூட்டுதல், பாடசாலையினுள் சிறுவர் துஷ்பிரயோகம் நடப்பதை குறைப்பதற்கும் தடுப்பதற்கும் மாணவத் தலைவர்களின் பங்களிப்பை பெறுதல், சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் முடிவெடுக்கும் செயல்பாட்டில் மாணவத் தலைவர்களைப் பங்குபற்ற வைத்தல், பாடசாலை யினுள் சிறுவர் நட்பு மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு மாணவத் தலை வர்களின் தலைமைத்துவ அறிவு, திறன், மனப்பாங்கை மேம்படுத்துவதற்கான தலையீடு மற்றும் சிறுவர் பாதுகாப் பின் பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறும் மாணவத் தலைவர் சமூகத்தை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் பிரதான இலக்காகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உணவகங்களில் திடீர் சோதனை





சாய்ந்தமருது, நவ. 08

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் சாய்ந்தமருது பிரதான வீதிகளில் உள்ள உணவகங்களில் நேற்று முன்தினம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சோதனையின் போது சுகாதாரமற்ற சூழலில் தயாரிக்கப்பட்ட உணவுகள், தரமற்ற பொருட்கள் மற்றும் சேமிப்பு குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதையடுத்து சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சோதனை நடவடிக்கையில் சுகாதார மருத்துவ அதிகாரி ஜே. மதன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் பங்கு பற்றினர். இதன்போது மருத்துவ அதிகாரி மதன் கூறுகையில், உணவகங்களில் உணவருந்தும் போது அங்குள்ள சுகாதார நிலையை கவனித்து, குறைபாடுகள் இருப்பின் உடனடியாக சுகாதார பிரிவுக்கு அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார...

சாரம்சம் வருமாறு-

உலக நாடுகளுக்கு இடையில் மோதல் இடம்பெற்ற போதிலும் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் எவ்வித பாதிப்பு ஏற்படவில்லை.

இந்த வருட இறுதிக்குள் அந்திய செலவாணி 7 வீதமாக அதிகரிக்கும் .

2030 ஆம் ஆண்டுக்குள் பொதுக் கடனை 87 வீதமாகக் குறைக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வருமானம் குறைந்த மக்களுக்கு அஸ்வெசும திட்டத்தை முன்னெடுப்பதுடன், 2026 ஆம் ஆண்டு மீண்டும் அஸ்வெசும பெறுவோரை மீளாய்வு செய்யவுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து, நாட்டுக்கு தேவையான பிரதி பலன்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

அரச நிறுவனங்கள் மற்றும் அரச சேவைகள் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் சேவைகளை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு ஈ சேவை அறிமுகப்படுத்தப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2026 மார்ச் மாதத்தில் அனைவரும் தங்களுடைய சொத்து விபரங்களை அறிவிக்கும் வகையில் டிஜிற்றல் சேவை அறிமுகப்படுத்தப்படும்.

அரச ஊழியர்களின் சம்பளம் ஏற்கனவே 3 கட்டங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கையூட்டு மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் பொருளதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

2025 ஆம் ஆண்டு 823 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2026 ஆம் ஆண்டு அரச சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் சட்ட மூலத்தை நிறைவேற்றுவோம்.

குற்றங்களை கட்டுப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கும்போது என்னை ஹிட்லர் என்று விமர்ச்சிக்கின்றனர்.

மக்களுக்கு எதிராக யாரேனும் தவறு இழைத்திருந்தால், அவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்திற்கு அமைய தண்டனை வழங்கப்படும். யாருக்கும் பாரபட்சம் பார்க்கப்படாது.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொருளாதார பிரதிபலன்கள் சமமாக கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதே 2026 ஆம் ஆண்டு பாதீட்டின் முக்கிய நோக்கமாகும். ஏற்றுமதியை இலக்காக கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப் புவோம்.

2025 ஆம் ஆண்டு 430 மில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானம் பெறப்பட்டுள்ளது.

எவரும் கடனை செலுத்துவது தொடர்பில் கவலை கொள்ள தேவையில்லை.

2032 ஆம் ஆண்டு தேசிய உற்பத்திக்கு சமமாக கடனை 90 வீதம் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பொய்யான பரப்புரைகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை என்றார். (அ)

## மாகாண...

பட்ஜெட் உரை யில் தெரிவித்துள்ளார். எனினும் அந்த தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக தேர்தலை நடத்தும் திகதியை உறுதியாக கூறமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை கொண்டுவர வேண்டியுள்ள தேவையுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறவுள்ளோம்-என்றார். (அ)

## பதில்...

அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராக பதவியேற்றுள்ளார்.

பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன வெளிநாடு சென்றுள்ளதன் காரணமாக, அவர் மீண்டும் நாட்டுக்குத் திரும்பும் வரை செயற்படும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (அ)

## வவுனியா...

வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதியும், முச்சக்கர வண்டியின் பின்னால் பயணித்த ஒருவரும் மாங்குளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில், முச்சக்கர வண்டியின் பின்னால் பயணித்த பயணி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இனப்பிரச்சினை...

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு சம்பிரதாயமாக சடங்காகவே உள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டின் முக்கிய பிரச்சனையான இனப்பிரச்னை தொடர்பில் ஜனாதிபதி எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை .

2025 ஆம் ஆண்டின் கொடுத்த வாக்குறுதிகள் தொடர்பில் ஜனாதிபதி ஏதும் சொல்லவில்லை.தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை என எந்த ஒரு விடயமும் இதில் உள்ளடக்கப்படவில்லை .

ஆசிய வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் கடன் பெற்று அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து செல்வதாக ஜனாதிபதி கூறுகின்றார் அவ்வாறு பெரும் கடன்களை எந்த வகையில் இவர்கள் அடைக்கப் போகின்றார்கள் அதுவும் மக்களின் தலைகளில் தான் சுமத்தப்படும்.

வழமையாக ஒரு அரசாங்கம் வருடாந்தம் கொண்டுவரும் ஒரு வரவு-செலவுத் திட்ட சடங்காகவே இந்த வரவு-செலவுத் திட்டமும் அமைந்துள்ளது அதாவது இது ஒரு வெற்று வரவு-செலவுத் திட்டமென்று தெரிகிறது-என்றார். (அ)

## மக்களுக்கு

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 வீதத்துக்கும் மேலாக பங்களிக்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டு, அவர்களினது வாழ்க்கை சீர்குலைந்து போயுள்ளன. இவர்களைப் பாதுகாக்க இந்த அரசாங்கத்தால் முடியாதுபோயுள்ளது.என்றார். (அ)

## ஊழல்வாதிகள்...

இழைத்திருந்தால், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டி ருந்தால் நிச்சயம் தண்டனை வழங்குவோம் என அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பதிலடி கொடுத்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராக நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் பாரிய பேரணியை நடத்துவதற்கு எதிரணிகள் திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பில் அறிவிப்பதற்காக கொழும்பில் சில நாட்களுக்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்டிருந்த சாகர காரியவசம் மற்றும் உதய கம்மன்பில ஆகியோர், மேற்படி ஹிட்லர் கதையைக் கூறி எதிரணிகளை ஒன்றுபடுவதற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த அறிவிப்பு பற்றி நேற்று ஜனாதிபதி கருத்து வெளியிட்டார்.

"ஹிட்லர் வந்துவிட்டார் என சிலர் கூறுகின்றனர். நீங்கள் ரஷ்யாவா, நீங்கள் அமெரிக்காவா (எதிரணியை பார்த்து கேட்கின்றார்) ஹிட்லரை தோற்கடிப்பதற்காக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றிணைந்தது வரலாற்றுக் கதை. அது உலக அரசியலில் முக்கிய திரும்பு முனை.

எதிரணிகள் எப்படியான விளக்கத்தை வழங்கினாலும் நாம் சட்டத்தை அமுலாக்குவோம்.

மக்களுக்கு அநீதி இழைத்திருந்தால், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருந்தால் நிச்சயம் தண்டனை வழங்குவோம். அதற்கு எந்த பெயர் சூட்டினாலும் பரவாயில்லை. எமது நடவடிக்கையை கைவிடமாட்டோம்."-என்றார் ஜனாதிபதி. (அ)

## அரச...

வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து பாராளுமன்றில் ஜனாதிபதி உரையாற்றியபோது இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல வருடங்களாக அரச சேவை வெற்றிடங்களுககு முறையான விதத்தில் ஆட்சேர்பபுச் செய்யப்படாமையினால் அரச சேவை பொறிமுறை முழுவதுமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனால், பிரதமரின் தலைமையில் தாபிக்கப்பட்டுள்ள அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான செயன்முறையை மீளாய்வ செய்தல் மற்றும் பதவி முகாமைக்கான குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முறையான ஆய்வின் பின்னர் சுமார் 75 ஆயிரம் பேரை உரிய முறையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய அரச சேவையை முன்னெடுத்து செல்வதற்காக இருக்க வேண்டிய தொழில்நுட்ப, சட்ட அமுலாக்கல், வருவாய் அதிகாரிகள் போன்ற பதவிகள் இதில் அடங்கும்.

அதே போன்று இனிவரும் காலங்களில் அரச துறையில் சகல ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் அரச தலையீடின்றி உரிய பரீட்சை மற்றும் சேவைப் பிரமாணங்களின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்வதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்படும்-என்றார். (அ)

## பற்றாக்குறை...

சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கமான தேநீர் விருந்துபசாரம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைப்பாளர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று ஆரம்பமாகி நவம்பர் 14 ஆம் திகதி வரை தொடரும். இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பு நவம்பர் 14 ஆம் திகதி மாலை 6:00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதன்பின், வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசெம்பர் 05 வரை நடைபெறும். மேலும், வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 05 ஆம் திகதி மாலை 6:00 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ)

## 21 வருடங்களின்...

இல்லாமல் பல்வேறு சிகிச்சைகளில் ஈடுபட்டார். இந்நிலையில் கடந்த ஒக்ரோ பர் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்று குழந்தைகளை பிரசவித்தார்.

குழந்தையை பிரசவித்த பின்னரான 32 நாட்களில் இரண்டு நாட்கள் கண் விழித்து பார்த்த நிலையில் ஏனைய அனைத்து நாட்களும் மயக்க நிலையிலேயே அவர் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவர் சிகிச்சை பெற்று வந்த காலப் பகுதியில் குடல் மற்றும் ஈரல் ஆகிய பகுதிகளில் கிருமித்தொற்று இருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இருப்பினும் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை இதுவரை வெளிவரவில்லை.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## மாகாண...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாணசபைத் தேர்தல் ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டதால், அதனை நடத்தாமல் ஆளுநர்கள் ஊடாக நிர்வாகத்தை முன்னெடுப்பது சட்டவிரோதமாகும்.

மக்கள் சபையை நிர்வகிக்கவேண்டுமெனில் மக்கள் வாக்களிப்புமூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அவசியம் என மாகாண சபைகள் தொடர்பான வழக்கு விசாரணையொன்றில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேர்தல் நடத்தப்படாமல் அது ஒத்திவைக்கப்பட்டுவருவது ஜனநாயக விரோதமாகும்.

ஆளுங்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் ஒரு வருடத்துக்குள் பழைய முறையிலேனும் மாகாணசபைத் தேர்தலை நடத்தி இருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் பிரச்னை எழுந்திருக்காது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குள்ள தடையை நாடாளுமன்றத்தால் மாத்திரமே தற்போது நிவர்த்தி செய்ய முடியும். எந்த முறைமையின்கீழ் தேர்தல் என்ற முடிவுக்கு வரவேண்டும். பழைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தால் அடுத்த வருடம் முற்பகுதியில் அதனை செய்ய முடியும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு எதிரணி வசம் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில்கூட இன்னும் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் உள்ளது-என்றார்.

## அரசாங்க...

குறிப்பிட்டார்.

இதேவேளை, அரச ஊழியர்களுக்கு வழங்கப் படும் பண்டிகை முற் பணத்தை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரை 10,000 ரூபாவாக வழங்கப்பட்ட பண்டிகை முற்பணத் தொகையினை 15,000 ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், சலுகை வட்டி வீதத்தில் அரச ஊழியர்களுக்கான வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்களை வழங்க வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கனடாவில் குடும்பம் படுகொலை குற்றத்தை ஏற்றார் இலங்கையர்

ஒட்டாவா, நவ. 08

கனடாவில் இலங்கையை சேர்ந்த குடும்பம் ஒன்றை கொலை செய்த குற்றத்தை இலங்கையைச் சேர்ந்த இளைஞர் நீதிமன்றில் ஏற்றுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், தனுஷ்க விக்கிரம சிங்க என்பவரை தாக்க முயற்சித் தமை தொடர்பான குற்றச்சாட்டை யும் சந்தேகநபர் ஒப்புக் கொண்டுள்ளார்.

முன்னதாக, இலங்கையை சேர்ந்த குடும்பம் ஒன்றின் தாய், 4 பிள்ளைகள் மற்றும் அவர்களின் நண்பர் உள்ளிட்ட 6 பேர் கடந்த 2024 மார்ச் 6ஆம் திகதி குத்திக் கொலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு ஒட்டாவா நீதிமன்றில் நடக்கிறது. வழக்கு விசாரணையில் தம்மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுகளில், 4 குற்றச்சாட்டுகளை இலங்கையரான சந்தேக நபர் டி சொய்சா ஏற்றுள்ளார்.

கொலை நடந்தபோது, டி சொய்சா 19 வயதான மாணவராக இருந்தார். அவர் ஒட்டாவாவின் பர்ஹேவன் புறநகர் பகுதியில் வசித்த விக்கிரமசிங்க குடும்பத்தினருடன் அவர்களின் வீட்டின் அடித்தளத்தில் வசித்து வந்தார். நண்பர் என்ற ரீதியில் கற்றல் செயல்பாடுகளுக்காக மாணவரான சொய்ஷா , விக்கிரமசிங்கவின் குடும்பத்துடன் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் கொலை இடம்பெற்ற தினத்திலேயே சந்தேகநபரான சொய்ஷா கைது செய்யப்பட்டார்.

வீசா காலம் நிறைவடைந்த நிலையில் கனடாவில் தங்கியிருந்த சொய்ஷா, தன்னிடம் பணம் இல்லாது போனமையால் கொலையை செய்ய எத்தனித்தார் என்று ஆரம்பத்தில் வாக்குமூலம் வழங்கியிருந்தார். கொலையை நடத்துவ தற்கு 5 நாட்களுக்கு முன்னரே தாம் திட்டத்தை வகுத்தார் என்றும் கூறியுள்ளார்.

கொலைக்கு பயன்படுத்தப் பட்ட கத்தியைக் கொண்டு, ஏற் கனவே தற்கொலை முயற்சியிலும் சந்தேக நபர் ஈடுபட்டுள்ளார் என்று நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஒரு குடும்பத்தின் நம்பிக்கையை சீர்குலைத்து, கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிபதி கூறினார். இதனால் நீதி மன்றத்தின் கூட்டுத் தீர்மானங்களுக்கு தாம் இணங்குகிறார் என்றும் தெரிவித்த நீதிபதி பிலிப்ஸ் வழக்கை நிறைவுறுத்தியுள்ளார்.

கொலைக் குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டுள்ளமையால் சந்தேகநபருக்கு பிணையற்ற வகையில் குறைந்தபட்சம் 25 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. (ஐ)

## 19 இலட்சத்தை கடந்தது சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, நவ. 08

இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 19 இலட்சத்தை கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 2025 ஜனவரி முதல் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நாட்டுக்கு வருகை தந்த மொத்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 19 இலட்சத்து 23 ஆயிரத்து 502 ஆகும்.

இவர்களில், 4 இலட்சத்து 31 ஆயிரத்து 235 பேர் இந்தியாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 167 பேர் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 61 பேர் ரஷ்யாவிலிருந்தும் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 415 பேர் ஜேர்மனியிலிருந்தும் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 619 பேர் சீனாவிலிருந்தும் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நாட் 32 ஆயிரத்து 815 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் வருடாந்த சுற்றுலா பயணிகளின் வருகை 20 இலட்சம் என்ற எல்லையை 4 சந்தர்ப்பங்களில் கடந்துள்ளது. 2016, 2017, 2018 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் இந்த எல்லையை கடந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்த ஆண்டில் இதுவரை 2,343 பேர் விபத்துகளில் பலி!

கொழும்பு, நவ. 08

கடந்த வருடம் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான 2 ஆயிரத்து 210 வீதி விபத்துகள் பதிவாகின. அவ்வாறான விபத்துகளில் சிக்கி 2 ஆயிரத்து 343 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் உதயகுமார வூட்லர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகை காலங்களின்போது வெளியிடங்களுக்கு சுற்றுலா செல்வோர் அவதானத்துடன் செயல்பட வேண்டும். பாடசாலை விடுமுறை என்பதாலும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும் பெருமளவானோர் வெளிமாவட்டங்களுக்கு செல்கின்றனர். அவ்வாறு குடும்பங்களுடன் வெளியிடங்களுக்கு செல்வோர் வாகனங்களின் தன்மை, இயந்திரம் தொடர்பிலும் அவதானம் செலுத்துவது அவசியம்.

கவனயீனம், அவதானம் இன்மை, மது போதையில் வாகனம் செலுத்துதல் ஆகியன உங்கள் அன்புக்குரியவர்களின் உயிருக்கு பாதகமாக அமையலாம். இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக அறிவியுங்கள்.

இந்த வருடம் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான 2 ஆயிரத்து 210 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகளில் சிக்கி 2 ஆயிரத்து 343 பேர் உயிரிழந்தனர். அத்துடன், படுகா யம் ஏற்படக்கூடிய வகையில் 4 ஆயிரத்து 360 விபத்துக் களும் பதிவாகியுள்ளன - என்றார். (ஐ)

## வெலிகம பிரதேச சபைக்கு 28ஆம் திகதி தவிசாளர் தெரிவு

கொழும்பு, நவ. 08

மாத்தறை - வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளர் எதிர்வரும் 28ஆம் திகதி தெரிவு செய்யப்படுவார் என்று அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தென் மாகாண உள்ளூராட்சி சபைக்கான ஆணையாளர் நாயகம் எராண்டி உமங்கா மெண்டிஸ் இந்த வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபையில் தவிசாளருக்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

முன்னதாக, வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர அண்மையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதையடுத்து அவரின் பதவி வெற்றிடமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையர் மீது இஸ்ரேலில் இரசாயனம் கலந்த நீர்த்தாரை

டெல் அவிவ், நவ. 08

இஸ்ரேலில் பணிபுரியும் வெளிநாட்டு பணியாளர்கள்மீது நடத்தப்பட்ட இரசாயனம் கலந்த நீர்த்தாரை பிரயோகத்தின்போது இலங்கை பணியாளர்கள் மூவர் பாதிக்கப்பட்டனர் என்று இலங்கைக்கான இஸ்ரேல் தூதரகம் அறிவித்துள்ளது.

முன்னதாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொலிகள், தகவல்கள் குறித்து தூதரகம் எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் டெல் அவிவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்களை இலக்கு வைத்து அங்குள்ள உள்ளூர் குழுக்களால் இரசாயனம் கலந்த நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் தூதரகத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இதன்படி, இலங்கையர்கள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இஸ்ரேலிடம் இலங்கை தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், பணம் அனுப்புவதற்கு தனித்து செல்லாது, குழுவாக பயணிக்குமாறும் உள்ளூர் பயணங்களின் போது பெறுமதியான பொருட்களை எடுத்துச் செல்வதை தவர்க்குமாறும் இலங்கையர்களை தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## மரண தண்டனை விதிக்கப்பட்டவர் 8 ஆண்டுகளின் பின்னர் விடுதலை!

கொழும்பு, நவ. 08

போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு 8 ஆண்டுகள் சிறையிலிருந்த ஒருவரை மேன் முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

நேற்று முன்தினம், நீதியரசர்கள் பி. குமாரரத்னம், பிரதீப் ஹெட் டியாராச்சி ஆகியோர் அடங்கிய அமர்வு, 2017 மார்ச் 20 அன்று கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை இரத்து செய்துள்ளது.

பிரதிவாதி தரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் வழக்கை நிரூபிக்கத் தவறிவிட்டது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னைய வழக்கின் போது, மேல் நீதிமன்ற நீதிபதி குற்றம் சுமத்தப்பட்டவருக்கு சாட்சியம ளிக்க அனுமதிக்காததால் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு நியாயமான விசாரணைக்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இது நியாயமான விசாரணைக்கான அரசமைப்பு உத்தரவாதத்தை மீறுவதாகும் என்று நீதிமன்றம் தெரிவித் துள்ளது.

முன்னதாக, ஒஸ்மான் பெரேரா என்பவர், 2002 ஆண்டு 4.4 கிராம் ஹெரோயின் வைத்திருந்தமை - கடத்திய குற்றச்சாட்டுகளுக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டார்.

விசாரணையைத் தொடர்ந்து, மேல் நீதிமன்றம் அவரை குற்றவா ளியாகக் கண்டறிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

கணவன், மகன்மீது போதை குற்றச்சாட்டு:

## நகர சபையின் உறுப்பினர் பதவியை துறந்தார் பெண்

கொழும்பு, நவ. 08

கணவனும் மகனும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுக்கு உள்ளானமையால் தனது நகர சபை உறுப்பினர் பதவியை தேசிய மக்கள் சக்தியின் பெண் உறுப்பினர் துறந்துள்ளார்.

கம்பஹா- பேலியகொடை நகர சபையின் உறுப்பினரான திஸ்னா நிரஞ்சலா குமாரி என்பவரே தனது பதவியை துறந்துள்ளார். அவரின் கணவர், மகன் தொடர்பில் தற்போது சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டில் போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த முழுக்கவனம் செலுத்தி வரும் இவ்வாறானதொரு தருணத்தில் நடந்த இந்தச் சம்பவம் குறித்து அவர் தனிப்பட்ட முறையில் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளார் என்றும் எனினும், சட்ட நடவடிக்கைகளுக்கு உதவவும் - நாட்டில் ஒரு நல்ல அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் நோக்கிலும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் தனது பதவியை துறப்பதாக அவர் தனது இராஜிநாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது இராஜிநாமா கடிதத்தை கம்பஹா மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார். இதன் பிரதி ஒன்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது. (ஐ)

வேகமாக வளரும் பொருளாதாரம்:

## 30 நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு இடமில்லை

நியூயோர்க், நவ. 08

வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட முதல் 30 நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது.

உலக புள்ளி விபர நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில இலங்கைக்கு இடம் கிடைக்கவில்லை. 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த பட்டியல் வெளியாகியுள்ளது.

இந்தப் பட்டியலில் தென் சூடான் முன்னிலையில் உள்ளது. 24.3 சதவீதம் அதிகரித்த வளர்ச்சி வீதத்தை அந்த நாடு கொண்டுள்ளது.

தென்சூடானை அடுத்து லிபியா(15.6 வீதம்), கயா னா(10.3 வீதம்), அயர்லாந்து (9.1 வீதம்) ஆகிய நாடுகள் அடுத்த இடங்களில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குளவி கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் மருத்துவமனையில்

நுவரெலியா, நவ. 08

நுவரெலியா, வெதமுல்லை தோட்டத்தில் ஏழு பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி நுவரெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.குறித்த சம்பவத்தில் ஆண் தொழிலாளர்கள் ஐவரும் பெண் தொழிலர்ளர்கள் இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.(எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org